DINAMALAR

8 OCT 2021

PAGE 9

# புதுச்சேரி பல்கலை பேராசிரியருக்கு வேதியியல் ஆராய்ச்சி கழக விருது



இந்திய வேதியியல் ஆராய்ச்சி கழக விருதுக்கு தேர்வு செய்யப்பட்ட புதுச்சேரி பல்கலைக்கழக பேராசிரியர் பக்ததாசை, துணைவேந்தர் குர்மீத் சிங் பாராட்டினார்.

**புதுச்சேரி, அக். 8–**

இந்திய வேதியியல் ஆராய்ச்சி கழக விருதுக்கு, புதுச்சேரி பல்கலைக் கழக பேராசிரியர் பக்ததாஸ் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

புதுச்சேரி பல்கலைக் கழக வேதியியல் துறை பேராசிரியர் பக்ததாஸ், இந்திய வேதியியல் ஆராய்ச்சி கழகத்தின் 2022ம் ஆண்டிற்கான வெண்கலப் பதக்க விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

கவுகாத்தி ஐ.ஐ.டி.,யில், அடுத்தாண்டு பிப்ரவரியில் நடக்க உள்ள 28வது தேசிய வேதியியல் கருத்தரங்கில் இவ்விருது வழங்கப்பட உள்ளது.

பேராசிரியர் பக்ததாஸ் மற்றும் அவரது ஆராய்ச்சி குழுவினர், புதுமையான மருத்துவ தொடர்புடைய ஹெட்ரோசைக்கிளிக் மூலக்கூறுகளை உருவாக்கும் எளிய வழிமுறைகளை கண்டறியும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

150க்கும் மேற்பட்ட சர்வதேச ஆராய்ச்சி கட்டுரைகளை பக்ததாஸ் வெளியிட்டுள்ளார்.

இந்திய வேதியியல் ஆராய்ச்சி கழக விருதுக்கு தேர்வு செய்யப்பட்ட பேராசிரியர் பக்ததாசுக்கு, துணைவேந்தர் குர்மீத் சிங் பாராட்டு தெரிவித்தார்.